# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 24235 / விசாரணை / 2009**

**விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.**

**முன்னிலை :** **திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,**
**மாநில தகவல் ஆணையர்**

**மனுதாரர் :** **திருமதி. எல். தங்கம்,**
**க/பெ. துரை இலட்சுமணராஜ்,**
**54, புனித மேத்தேயூ தெரு,**
**பாளையங்கோட்டை,**
**திருநெல்வேலி மாவட்டம் – 627 002.**

**பொது அதிகார அமைப்பு :** **பொதுத் தகவல் அலுவலர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**பாளையங்கோட்டை வட்டம்,**
**திருநெல்வேலி மாவட்டம்.**

---------

மனுதாரர் திருமதி. எல். தங்கம் மற்றும் திரு. எஸ். ஆறுமுகம், மண்டல துணை வட்டாட்சியர், பாளையங்கோட்டை வட்டம், திருநெல்வேலி மாவட்டம் இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 19.01.09 அன்று ஒரு குறிப்பிட்ட கோப்பின் நகல் கேட்டு மனு செய்துள்ளார். மனுதாரருக்கு தகவல் கிடைக்காததால் 30.09.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் பல மனுக்கள் அனுப்பப்பட்டதாக தெரிவித்தார். குறிப்பிட்டு மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி மனு செய்தது குறித்து விசாரிக்கப்பட்டது. தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல் கேட்டது குறித்தும் தகவல் தரப்பட்டது மற்றும் தரப்படாதது குறித்தும் மனுதாரரால் எதுவும் தெரிவிக்க இயலவில்லை.

மனுதாரர் மேல்முறையீட்டு மனுவில் பட்டா வழங்க அறிவுறுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளாரே தவிர குறிப்பிட்டு தகவல் தரப்படவில்லை என்று எந்த குறிப்பும் தெரிவிக்கவில்லை. பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து கோப்புகளை பெற்று மனுதாரர் அளித்த மனுவினை பார்வையிட்டு விசாரணை நடத்தப்பட்டது. மனுதாரர் **<u>19.01.2003</u>** என்று தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட அலுவலகக் கோப்பின் நகல் கேட்டு விண்ணப்பித்திருப்பது தெரிய வருகிறது. மனுதாரரின் மனு **<u>29.01.2009</u>** அன்று பொதுத் தகவல் அலுவவகத்தில் பெறப்பட்டுள்ளதால் மனு நாள் **19.01.03** என்பது தவறாக குறிப்பிட்டுள்ளதாக கருதப்பட்டு மனு நாள் 19.01.2009 என்று எடுத்துக்கொள்ளப்பட்டது. சம்பந்தப்பட்ட மனுக்கு தகவல் அளிக்கப்பட்டது குறித்து கோப்புகள் ஆய்வு செய்ததில் 23.03.09 அன்று மனுதாரருக்கு பதிவேட்டின் பாதுகாப்பிற்கும், பேணுதலுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியதாகவும் உள்ளதால் வழங்க மார்க்கம் இல்லை என்று தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 7(9)–ன் கீழ் குறிப்பிட்டு தகவல் மறுக்கப்பட்டதாக தெரிகிறது. இது குறித்து விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில் சம்பந்தப்பட்ட கோப்பு பதிவேட்டிலிருந்து பெற்று அறிக்கை அனுப்பப்படுவதாக மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்தார். சம்பந்தப்பட்ட கோப்பு ஓ.மு–வாக முடிக்கப்பட்டுள்ளது. ஓ.மு–வாக முடிக்கப்பட்ட கோப்பு பொதுத் தகவல் அலுவலர் அவ்வலுவலகத்தில் அழிக்கப்பட்டது குறித்தோ அல்லது அவ்வலுவலகத்தில் இருப்பது குறித்தோ தெளிவாக எதுவும் தெரிவிக்க இயலவில்லை. மனுதாரர் கேட்கும் கோப்பு இருப்பது குறித்து விசாரணையில் அறிய முடியாத நிலையில் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1) மனுதாரர் கேட்டுள்ள தகவலை உரிய கோப்புகளைப் பெற்று இவ்வாணை கிடைக்கப் பெற்ற 10 தினங்களுக்குள் மனுதாரருக்கு அளித்து அதன் விவரத்தை இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.
2) மனுதாரர் கேட்டுள்ள கோப்புகள் அவ்வலுவலகத்தில் இல்லாத நிலையில் அது குறித்து உரிய ஆதாரங்களுடன் பிரமாண வாக்குமூலத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 20 தினங்களுக்குள் இவ்வாணையத்திற்கு அனுப்புமாறு பொதுத் தகவல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3) மனுதாரர் மனுவிற்கு தகவல் தராமலும், கோப்புகள் இருப்பது குறித்து எவ்வித தகவலும் அளிக்காததற்கும், மனுதாரருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 7(9)–ன் கீழ் வழங்க இயலாது என்று தெரிவித்ததற்கும் தகவல் உரிமைச் சட்டப் படி மனு செய்ததற்கு தகவல் வழங்க மறுக்கப்பட்டதாக கருதி தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)–ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தைப் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று ஒரு மாதத்திற்குள் இவ்வாணையத்திற்கு அனுப்புமாறு **மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி** கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010 தமிழ்நாடு தகவல் ஆணையம்
ஆணையத்தின் ஆணைப்படி

( சு. மோகன தாஸ் )
உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். 24235/09</u>

பெறுநர்
மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பாளையங்கோட்டை வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

திருமதி. எல். தங்கம்,
க/பெ. துரை இலட்சுமணராஜ்,
54, புனித மேத்தேயூ தெரு,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி மாவட்டம் – 627 002.